[22nd September 1958

Sri S. LAZAR : அரசாங்கம் உத்தரவு ஏற்கெனவே அனுப்பியிருந்த போதிலும்கூட ஒரு சில பள்ளிகளிலே இந்தச் சலுகை மறுக்கப்படுவது அரசாங்கத்துக்குத் தெரியுமா ? இந்தத் திருத்தத்தை சீக்கிரமே அமுலுக்குக் கொண்டுவருவதற்கான முயற்சியை சர்க்கார் எடுக்குமா ?

The Hon. Sri C. SUBRAMANIAM : இது எங்கே அமல் நடத்தப்படவில்லை என்பதைப்பற்றி தகவல் கொடுத்தால் சர்க்கார் வேண்டிய நடவடிக்கைகள் எடுக்கும்.

Rajaji Tuberculosis Sanatorium

* 404 *Q.*—Sri N. K. PALANISAMI (on behalf of Sri M. Kalyanasundaram) : Will the Hon. the Minister for Revenue be pleased to state—

(*a*) whether the Government have received the resolution passed by the Tiruchirappalli District Planning Board at its meeting held on 25th April 1958, regarding the taking over of the Rajaji Tuberculosis Sanatorium; and

(*b*) the decision taken by the Government on that proposal?

The Hon. Sri M. A. MANICKAVELU : (*a*) No, Sir.

(*b*) Does not arise.

House-sites for Harijans

* 405 *Q.*—**Sri P. G. MANICKAM :** கனம் பொது மராமத்து அமைச்சர் அவர்கள் தயவு செய்து பதிலளிப்பாரா—

ஹரிஜனங்களுக்கு வீட்டு மனைக்கட்டு நிலங்கள் கிரயத்துக்கு வாங்கி இலவசமாக வழங்குவதற்காக 1958-59-ம் ஆண்டுக்கு ஒதுக்கப்பட்டிருக்கும் தொகையிலிருந்து ஒவ்வொரு ஜில்லாவுக்கும் பகிர்ந்தளிக்கப்பட்ட தொகை எவ்வளவு ?

The Hon. Sri P. KAKKAN : A statement[a] is placed on the table of the House.

Sri P. G. MANICKAM : இரண்டாவது ஐந்தாண்டுத் திட்ட காலத்திலே சென்னை ராஜ்யத்திலிருக்கும் 105 கிராமங்களிலே ஹரிஜனங்களுக்கு வீடு மனைக்கட்டு நிலங்கள் வாங்குவதற்காக மத்திய சர்க்கார் 1 கோடி ரூபாய் ஒதுக்கியிருக்கிறது என்றும், மேற்கொண்டு தொகை தேவைப்படுமானால், மற்ற ராஜ்யங்களில் செலவழிக்கப்படாமல் மீதியிருப்பதை சென்னை அரசாங்கத்துக்கு கொடுப்பதாகவும், 16-5-58-ல் சென்னைக்கு விஜயம் செய்த மத்திய சர்க்கார் மந்திரி ஸ்ரீ கே. வி. ரெட்டி அவர்கள் தெரிவித்தார்கள். இந்திய சர்க்கார் ஒவ்வொரு ராஜ்யத்திலும் வீடு மனைக்கட்டுகள் வாங்குவதற்கு எவ்வளவு தொகை தேவை என்ற ரிப்போர்ட்டை இந்த வருஷம் அனுப்புவதாகத் தெரிவித்திருக்கிறார்கள். இது சம்பந்தமாக நமது ராஜ்யத்திலே ஹரிஜனங்களுக்கு வீடு மனைக்கட்டுகள் வாங்குவதற்கு திட்டம் வகுக்கப்பட்டிருக்கிறதா ?

The Hon. Sri P. KAKKAN : கனம் அங்கத்தினர் சொல்லும் விவரம் எனக்குத் தெரியாது. இந்த ஸ்டேட்மெண்டில் கொடுக்கப்பட்டபடி, மனைக்கட்டுகள் வாங்குவதற்காக நமது ராஜ்ய சர்க்கார் 4 லட்சம் ரூபாயும், மத்திய மாகாண சர்க்கார் திட்டப்படி 5,35,000 ரூபாயும் செலவழிக்கப் போகிறார்கள் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

---

[a] Printed as Appendix III on page 488 infra.